# கிருபையுள்ள வார்த்தை

## KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22

Vol - 19 | July ஜுலை | 2018

ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-



..நீங்கள் நன்மை செய்து
பாடுபடும்போது
பொறுமையோடே சகித்தால்
அதுவே தேவனுக்கு முன்பாகப்
பிரீதியாயிருக்கும்

1 பேதுரு 2:20

கௌரவ ஆசிரியர் BETTY CHOATE
ஆசிரியர் பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| சகித்துக்கொள்ளுங்கள் | 3 |
| வேதாகமத்தில் பொறுமையான.. | 6 |
| அடிப்படை வேதாகம ஆராய்ச்சி | 7 |
| யோசுவா | 9 |
| சிறுவர் பகுதி | 10 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா,** M.Th.,

**R. ஆண்டனி ராஜா,** D.Th., M.B.A (Bible Studies)

**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D.,

**C. கியாமிலன் கார்த்திக்,** B.Sc.,

**P. பேபி ராஜா** D.Th., **E. ஜோசப் பிரதீப்** B.Th.,


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

### நம்பிக்கை T.V. யில்

வெள்ளி காலை
**6 மணி முதல் 6-30 மணி**

செய்தியாளர்

போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)


### தமிழன் T.V. யில்


ஞாயிறு காலை 6-45 மணி


செய்தியாளர்

சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
(இணை ஆசிரியர் - கிருபையுள்ள வார்த்தை)

**கிருபையுள்ள வார்த்தை நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.**




**Advanced Bible Correspondence Courses Available in English.**

For Details:


**CHOATE BIBLE CORRESPONDENCE COURSE INSTITUTE**

P.O.Box 15, Arasaradi,
Madurai - 625 016. Tamilnadu

**கிருபையுள்ள வார்த்தை**

"பொறுமையை போதிக்கும் பொக்கிஷமான வார்த்தை"

**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




Send Postal Expenses only
and
receive
The Voice of Truth
International Vol. 96

# சகித்துக்கொள்ளுங்கள்

P.C. பிலேமோன் ராஜா



அன்பானவர்களே! நமக்காக பாடுகளையும்,
அவமானங்களையும், துன்பங்களையும் சுமந்த ஆண்டவர்
இயேசுகிறிஸ்துவின் பெயராலே வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்.

வேத வசனங்கள் தேவனுடைய பிள்ளைகளாகிய நம்மை, பொறுமையோடே, சகிப்பு தன்மையுடனே வாழும்படியாக அறைகூவல் விடுகிறது.

பொறுமை என்பது பொறுத்துக்கொள்வதாகவும்; சகிப்பு தன்மை என்பது, அதனை ஏற்றுக்கொள்வதாகவும் இருக்கிறது.

## 1. உபத்திரவத்தை சகித்துக்கொள்ளுங்கள்!

**எபி 10:32** "முந்தின நாட்களை நினைத்துக்கொள்ளுங்கள்; நீங்கள் பிரகாசமாக்கப்பட்டிருந்த அந்த நாட்களில் உபத்திரவங்களாகிய மிகுந்த போராட்டத்தைச் சகித்தீர்களே."

உபத்திரவம், போராட்டம், துன்பம் என்பது கிறிஸ்தவத்திற்கும், கிறிஸ்தவர்களுக்கும் புதிதல்ல. அதனை ஏதோ புதுமையென்று நினைக்க வேண்டாம், நினைத்து கலங்க வேண்டாம் என பேதுருவின் மூலம் பரிசுத்த ஆவியானவர் நம்மை ஊக்கப்படுத்துகிறார். **1பேதுரு 4:12** "பிரியமானவர்களே,உ ங்களைச்சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்."

ஏனெனில், கிறிஸ்தவம் என்பது சத்தத்தில் பிறந்தது அல்ல, அது கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தில் பிறந்து, பரிசுத்தவான்களின் இரத்தத்திலே வளர்ந்து பெருகியது . **எபி 11:36-38** "வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள்; கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சைப் பார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள். செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித்தார்கள்; உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை; அவர்கள் வனாந்தரங்களிலேயும் மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள்."

முதலாம் நூற்றாண்டு கிறிஸ்தவர்களைப் போன்றோ, அப்போஸ்தலர்களைப் போன்றோ, நாம் ஒன்றும் நிறைய உபத்திரவங்களை அநுபவிக்கவில்லை என்பதே உண்மை. அவர்கள் வீடுகளுக்குள் புகுந்து அடித்து நொறுக்கபட்டு, சிதறப்பட்டார்கள். **அப் 8:3,1** "சவுல் வீடுகள்தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக்கொண்டுபோய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தான்." "அவனைக் கொலைசெய்கிறதற்குச் சவுலும் சம்மதித்திருந்தான். அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர்தவிர, மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப் போனார்கள்."

கிறிஸ்துவிடம் வாழும்படியாக அல்ல, கிறிஸ்துவிற்காக மரிக்கும்படியாக அவர்கள் வந்ததினால், இந்த கொடுமையான உபத்திரங்களும், போராட்டங்களும், துன்பங்களும் அவர்களுக்கு பெரிதாக தெரியவில்லை. மாறாக, கிறிஸ்துவே அவர்களுக்கு பெரிதாக தெரிந்தார். ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் வந்த உபத்திரவங்களை விருப்பத்துடனே அனுபவித்தார்கள். **2கொரி 12:10** "அந்தப்படி நான் பலவீனனாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்: ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்குவரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்."

கிறிஸ்துவினிமித்தம் நமக்கு வரும் போராட்டங்களையும், உபத்திரவங்களையும் நாம் எவ்வாறு பார்க்கிறோம், அவைகளை எவ்வாறு அனுகுகிறோம் என்பது மிகவும் அவசியமான ஒன்று. கிறிஸ்து தனக்கு நேரிட்ட பேராட்டங்களையும் உபத்திரவங்களையும் எப்படி பார்த்தாரோ, அனுகினாரோ (எதிர்கொண்டாரோ), அவ்விதமே நாம் செய்ய வேண்டும். மேலும் அவ்விதமே நாம் அவைகளை எதிர்கொள்ளும்படி கிறிஸ்து நமக்கு போதிக்கவும் செய்தார். **மத்தேயு 5:39** "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பி கொடு."

தேவனுடைய பிள்ளைகள் முள்ளுள்ள நிலத்தில் விழுந்த விதையைப் போல உபத்திரவங்களினால் பலனற்றுப் போனவர்களாக இருந்துவிடக்கூடாது. **மத் 13:22** "முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன் வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால், அவனும் பலனற்றுப்போவான்."

முதலாம் நூற்றாண்டு கிறிஸ்தவர்களும், அப்போஸ்தலர்களும் அநேக கொடுமையான

உபத்திரவங்களை சில காரணங்களுக்காக சகித்துக்கொண்டார்கள். அவைகளை நாம் அறிய வேண்டியது அவசியம்.

## 2. சத்தியத்திற்காக சகித்துக்கொள்ளுங்கள்.

**கலாத்தியர் 4:16** "நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொன்னதினாலே உங்களுக்குச் சத்துருவானேனோ?"

பவுல் சத்தியத்தை சொன்னதினாலே, பட்டணங்கள் தோறும் துன்புறுத்தப்பட்டார் என்பதை நாம் அப்போஸ்தலர் புத்தகத்தில் வாசிக்க முடியும். கொரிந்து சபையாருக்கு எழுதும் போது அதை தெளிவாக விவரிக்கிறார். **2கொரி 11:23–27** "நான் அதிகமாய்ப் பிரசாயப்பட்டவன், அதிகமாய்க் அடிப்பட்டவன் அதிகமொய்க் வெல்களின் வைக்கப்பட்டவன், அநேக தரம் மரண அவதியில் அகப்பட்டவன் யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்; மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன். அநேகந்தரம் பிரயாணம் பண்ணினேன்; ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும், பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன்."

சத்தியத்தினை அறியாதவர்களால் வந்த மோசங்கள் மாத்திரமல்ல, சத்தியத்தை அவர் யாருக்கு போதித்தாரோ அவர்களாலும் அவர் ஒரு சத்துருவை போல நடத்தப்பட்டார் என்பதை கலாத்திய நாட்டு சபையாருக்கு சொல்கிறார். ஆகையால் தான் அப்போஸ்தலனாகிய பவுல் , சத்தியத்திலே நிலைத்திருந்து, உபத்திரவங்களின் வழியே பரலோகம் செல்ல வேண்டும் என சபையின் மூப்பர்களுக்கு அறிவுறுத்தினார். **அப் 14:22** "சீஷருடைய மனதைத் திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொல்லி, நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்று சொன்னார்கள்."

சத்தியத்தினை சொன்னதினாலே ஸ்தேவான் மிகவும் கொடுமையான முறையில் கல்லெறிந்து கொல்லப்பட்டார் **(அப் 7).** அவரை கொன்ற கொலைகாரர்கள் அனைவரையும், தேவன் மன்னிக்கும்படி ஜெபிக்கவும் செய்தார். சத்தியத்திலே நிலைநிற்கவும், சத்தியத்தை போதிக்கவும், சத்தியத்தை தற்காக்கவும் நாம் என்ன செய்கிறோம். அதினிமித்தம் வரும் உபத்திரவங்களை சகித்துக்கொள்கிறோமா? சிந்திப்போம்! வசனத்தோடு எதையும் கூட்டவோ குறைக்கவோ தேவன் அனுமதிப்பதில்லை என்பதிலிருந்து, சத்தியத்திற்காக தேவனுடைய வைராக்கியத்தை புரிந்துக்கொள்வோம்.

## 3. பரிசுத்தத்திற்காக சகித்துக்கொள்ளுதல்.

**எபி 12:4** "பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே."

பரலோக பிதா, அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த நம்மை உயிர்ப்பித்து, தமது குமாரனின் இரத்தத்தினாலே திருமுழுக்கின் மூலமாக கழுவி பரிசுத்தப்படுத்தியிருக்கிறார் **(எபே 2:1–8; 5:25–27).** அந்த பரிசுத்ததினை பாதுகாத்துக்கொள்ள வேண்டியது, அதாவது தக்கவைத்துக்கொள்ள வேண்டியது, மீட்கப்பட்ட ஒவ்வொருவரின் பொறுப்பாகும்.

தேவன் நமக்கு கொடுத்த பரிசுத்தத்தை போராடி காத்துக்கொள்ள வேண்டும் என்றும், அந்த போராட்டம் இரத்தம் சிந்தப்பட்டதக்கதாக, அதாவது, உயிரை கொடுப்பதாகவும் இருக்கலாம். யோசேப்பு தன் வாழ்வின் பரிசுத்தத்தினை காத்துக்கொள்ள, சிறைக்கு சென்று அடிமையானார். சிறைக்கு செல்வதையும், உயிரைவிடுவதையும் பற்றி அவர் கவலைக் கொள்ளவில்லை. அவரது கவலையெல்லாம் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்து, பரிசுத்தத்தை இழந்துவிடக்கூடாது என்பதே.

தேவன் தந்த பரிசுத்தத்தை நாம் தக்கவைத்துக்கொள்ள என்ன செய்கிறோம்? பாவத்திற்கு எதிராக போராடுகிறோமா அல்லது பாவத்தோடு (பாவம் செய்து) போராடி கொண்டிருக்கிறோமா? சற்று நிதானித்து நம்மை நாமே யோசித்து, தேவனுக்கு பிரியமாக செயல்படுவோம்.

## 3. கீழ்படிதலில் நிலைநிற்க சகித்துக்கொள்ளுங்கள்.

**பிலி 2:8** "அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்." தேவனுடைய பிள்ளைகளாகிய

நாம் நமது மரணபரியந்தம் தேவனுக்கு கீழ்படிபவர்களாக இருக்கிறோம். கீழ்படிதலுக்கு மாற்றாக ஏது ஒன்றையும் நாம் செய்யலாகாது. கீழ்படிதலுக்கு பதிலீடாக ஒன்றையும் கொடுக்கவும் முடியாது. சவுல் கீழ்படிதலுக்கு பதிலாக பலி செலுத்தினதை தேவன் ஏற்கவில்லை என்பது நாம் அறிந்ததே (1சாமு 15:1–35).

ஆபிரகாம், தான் காணாத, அறியாத இடத்திற்கு போ என்று தேவன் சொன்னபோது போனார். விக்கிரங்களை விட்டு அவரை வழிபட சொன்னபோது வழிபட்டார். பிள்ளை தருகிறேன் என்ற போது காத்திருந்தார். கொடுத்த பிள்ளையை பலிகொடு என்ற போது பலி கொடுத்தார். ஆபிரகாமிற்கு தேவனுக்கு கீழ்படிவதற்கு முன் வேறு எதுவும் பெரிதாக தெரியவில்லை. தேவன் மாத்திரமே அவனுக்கு பெரிதாகவும், அவர் சொல்வதை செய்வதே நல்லதாகவும் மற்றும் சிறப்பானதாகவும் இருக்கும் என ஆபிரகாம் முழுமையாக நம்பினார் (எபி 11:8–19).

இந்த ஆண்டுகளில் ஆபிரகாம் எவ்வளவு சிரமங்களை சந்திப்பார் என்பதை பைபிளில் நாம் தெளிவாக அறிய முடிகிறது. அவ்வளவு சிரமங்களையும் சகித்து, தேவனுக்கு கீழ்படிவதிலே குறியாக இருந்தார். ஏனெனில் அதுவே ஆபிரகாமின் குறிக்கோளாக இருந்தது. தேவனுக்கு அவரவர் கீழ்படியனும், கீழ்படிதலை தொடர சகிப்பு தன்மை வேண்டும். சகிப்பு தன்மையில் வளரனும், அதுவே நம்மை குறித்த தேவனுடைய சித்தமாகும்.

அநியாயத்தை மற்றும் நஷ்டத்தை சகித்துக்கொள்ளுங்கள் என்றும், 1கொரி 6:7 "நீங்கள் ஒருவரோடொருவர் வழக்காடுகிறது எவ்விதத்திலும் குற்றமாயிருக்கிறது. அப்படிச்செ சய்கிறதைவிடநீ ங்கள்ஏ ன்அ நியாயத்தைச்ச கித்துக் கொள்ளுகிறதில்லை, ஏன் நஷ்டத்தைப் பொறுத்துக்கொள்ளுகிறதில்லை?'' அவமானத்தை சகித்துக்கொள்ளுங்கள் என்றும் எபி 12:2,3 "அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்.'', வேதவசனம் நம்மை உற்சாகப்படுத்துகிறது.

சகிப்பு தன்மையை நாம் நமது வீட்டில் துவக்குவோம்; பெற்றோர் பிள்ளைகளிடையே, கணவன் மனைவியிடையே, சொந்த பந்தங்களிடையே, மற்றும், அதை சபையிலே வெளிப்படுத்துவோம் அதோடு நில்லாமல் சமுதாயத்திற்கும் கொண்டுசெல்வோம்.

— அன்புடன், ஆசிரியர்


## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 6.45 - 7.00 a.m (TAMILNADU Contact Mobile : **92 4421 4421 & 92 4431 4431)** ***Nambikai TV :*** *Every Friday 6.00 - 6.30 a.m.*

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 09844070763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel.

(KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile : 098108 96789)

# வேதாகமத்தில் பொறுமையான பெண்கள்

பேபி ராஜா



கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளுக்கு, இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

வேதாகமத்தில் அநேக சகோதரிகளைப்பற்றி நாம் படித்துள்ளோம்:

1. குணசாலியான பெண்கள்
2. புத்தியுள்ள பெண்கள்
3. ஜெபிக்கும் பெண்கள்

என்று பல பெண்களைப் பற்றி படித்துள்ளோம்.

இம்மாதம் நாம் படிக்கப் போகிற கருத்து, பொறுமையான பெண்கள் பற்றியது.

பொறுமையான பெண்களைப் பற்றி வேதம் நமக்கு என்ன சொல்லித்தருகிறது என்று பார்ப்போம். **1கொரி : 13:4ல்** "அன்பு நீடிய சாந்தமும், தயவுமுள்ளது" என்று சொல்லப்பட்டுள்ளது. சினத்தை தவிர்த்து, எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டு, ஒரு பெண் பொறுமையாக இருக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

நாம் தேவனுடைய பிள்ளையாக இருப்பதினால், சபையில், நம் வீட்டில் கணவர், பிள்ளைகள் மற்றவர்களிடம் நாம் பொறுமை என்கிற குணத்தை காண்பிக்க வேண்டும். கோபப்படுதலை தவிர்த்து எல்லாவற்றையும் தாங்கி, பொறுமையான சகிப்பு தன்மையுள்ள பெண்ணாக இருக்க வேண்டும்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து கூட லோத்தின் மனைவியை ஒரு எச்சரிப்பாக எடுத்துக்கொள்ளும்படி கூறுகிறார். லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள் **(லூக்கா 17:32).** அவள் தனது பொறுமையின்மையினால் தன் வாழ்வையே இழந்துபோனாள்.

விசுவாசத்தை துவக்குகிறவரும், முடிக்கிற வருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை நோக்கி நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓடக்கடவோம். வாடாத ஜீவ கீடத்தை பெற்றுகொள்வோம். லோத்தின் மனைவியைப் போல இல்லாமல், முன்னோக்கி (இயேசுவை நோக்கி) போவோம்.

எஸ்தர் ராஜாத்தியைப் பற்றி படிக்கும் போது, **(எஸ்தர்:8:13–17)ல்** ராஜாவிடம் தன் காரியத்தை சொல்ல பொறுமையுடன் காத்திருந்தாள். அரசனிடம் பேசும்பொழுதும், தன் ஜனங்களுக்காக அவள் மன்றாடும் போதும், சிறிது கூட ஆத்திரப்படாமல் மிகவும் பொறுமையுடன் தன்னுடைய வேண்டுதலையும், மன்றாட்டுகளையும் அரசனுக்குப் தெரியப்படுத்தினாள். போராட்ட நேரங்களில், வாழ்வா? சாவா? என வரும்போது, கர்த்தரைதேடி, அவர் தயை நாடனும் என்ற பொறுமை குணம் எஸ்தரைப் போல நமக்கும் இருந்தால், தேவன் நமக்கு உதவி சொல்வார்.

அடுத்து, நாம் யோபின் மனைவியை பற்றி பார்க்கும் போது, தன் ஆஸ்திகளையும், தான் பெற்ற பத்து பிள்ளைகளையும் தேவன் எடுத்துக்கொண்ட போதும், அதை சகித்து பொறுமையாக இருந்தாள். தன் கணவனும் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை பருக்கள் வந்து பாதிக்கப்பட்டபோது, அவள் தனது பொறுமையையும், சகிப்புதன்மையையும் இழந்து, தன் கணவனை பார்த்து : "தேவனை தூஷித்து உன் ஜீவனை விடு" என்றாள் **(யோபு : 2:9–10).** ஆபத்து காலத்தில் தேவனை கூப்பிட வேண்டும் என்பதை மறந்து, தேவனை தூற்றிட தன் கணவனை தூண்டினாள்.

"ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கி கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன்" என்று தேவன் வாக்கு கொடுத்திருக்கிறார் **(சங் 50:15).** அவரை விசுவாசித்து ஜெபிக்கும் போது விடுவிக்கிறவராயிருக்கிறார்.

**யாக்கோபு 1:2–4** "என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது." வாழ்வின் போராட்டங்களால் நாம் பொறுமையை, சகிப்புத்தன்மையை கற்றுக்கொள்ள வேண்டும். அப்படி அவைகளை பொறுமையுடன் சகித்துக்கொள்ளும் போது நாம் பாக்கியவான்களாகிறோம் **(யாக் : 1:12).**

தேவன், யோபுவை சோதனையின்றி காப்பாற்றி, அவனை இரண்டு மடங்கு ஆசீர்வதித்தார் **(யோபு 42).** பெண்களாகிய நாம் எது ஒன்றையும் பேசவோ, செய்யவோ மற்றும் போதிக்கவோ பொறுமையும், வாழ்வின் போராட்டங்களை ஜெயிக்க சகிப்புத்தன்மையும் மிக அவசியம். இந்த தெய்வீக குணத்தை தான் தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். இதில் வளர தேவன் நம்மை ஆசீர்வதிப்பாராக!

# பாடம் : 5 - கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டிற்கு கீழ்பட்டவர்களல்ல

**விளக்கம் :** பழைய ஏற்பாட்டின் பிரயோகங்களால் கிறிஸ்தவன் ஆட்சி செய்யப்படவில்லை என்னும் உண்மையை நாம் முற்பகுதியில் வாசித்தறிந்தோம்.

1. புதிய வஸ்திரத் துண்டை பழைய வஸ்திரத்தின் மேல் ஒருவரும் போட்டு இணைப்பதில்லை. புதிய திராட்சை ரசத்தை பழைய துருத்தியில் வார்த்து வைக்கப்படுவதில்லையென்று இயேசு சொன்னார். **(லூக்கா 5:30–39).**

2. கிறிஸ்தவன் நியாயப்பிரமாணத்திற்கு மரித்தவனாகவும் அதனுடைய கட்டிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறான். **(ரோமர் 7:17).**

3. முதன் முதல் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணமானது தேவன் தன் விரலைக்கொண்டு கற்பலகையில் எழுதிக்கொடுத்தது. மையினாலோ கற்பலகையினாலோ எழுதப்படாமல், இருதயமான சதையான பலகைகளிலே ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினால் எழுதப்பட்டுள்ளதே, ஒரு கிறிஸ்தவனுடைய மேன்மையாயுள்ளது. **(2 கொரிந்தியர் 3–ம் அதிகாரம்).**

4. கற்பலகையின்மீது எழுதப்பட்ட நியாயப்பிரமாணம் மகிமைக்குரியது.

5. மகிமைக்குரியதாய்ச் சொல்லப்பட்டு, இல்லாமையாக்கப்பட்டு, என்றும் கலைக்கப்பட்டது என்றும் பவுல் தெளிவாகச் சொல்லுகிறார்.

6. எது நிலைத்திருக்கிறதோ அது மகிமையானதல்ல. ஆனால் அதிக மகிமையானது, மகா உன்னத மகிமையானது. அதுவே கிறிஸ்தவர்கள் ஆசாரியராக உள்ள புதிய ஏற்பாடு.

7. நியாயப்பிரமணத்தின் கீழ் கட்டுண்டு இருந்தவர்களை கிறிஸ்து மீட்டார் என்பதையே கலாத்தியர், அதிகாரம் 4 முதல் 6 வரையில் கூறுவதைக் காண்கிறோம்.

8. சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணமோ **கலாத்தியர் 4:30–ல்** பேசப்படும் அடிமையானவள் என்று காட்டினோம். அடிமையானவளையும் அவளுடையவைகளையும் புறம்பே தள்ளு என்று சொல்லப்பட்டிருக்கிறது.

9. ஆதலால் கிறிஸ்துவர்கள் பழைய ஏற்பாட்டின் நியாயப்பிரமாணமாகிய அடிமையானவளுக்குப் பிறந்தவர்களாயிராமல், புதிய ஏற்பாட்டின் சுயாதீன முள்ளவளுடைய குமாரர்களாயிருக்கிறார்கள்.

10. எபேசியர் 2-ம் அதிகாரம் வசனம் 15-ல் சொல்லியிருக்கிறபடி பிரிவினையாகிய நடுச்சுவர் தகர்க்கப்பட்டது. அழித்து இல்லாமையாக்கப்பட்டது. சட்ட திட்டங்களாகிய நியாயப்பிரமாணம் உடைத்து எறியப்பட்டது.

11. கட்டளைகளால் நமக்கு விரோதமாய் இருந்த கையெழுத்தை குலைத்து அது நடுவிலாரதபடிக்கு எடுத்து சிலுவையின் மேல் ஆணி அடித்தாய் விட்டது என்பதாக **கொலேசியர் 2–ம் அதிகாரத்தில்** பார்க்கிறோம்.

இன்று வாசிக்க வேண்டிய பாகத்தில் நாம் பழைய ஏற்பாட்டின் பிரமாணங்களால் ஆளப்படவில்லை என்பதை முற்றுமாய் ஆராய்வோமாக.

## I. எபிரேயர் 6–ம் அதிகாரம் முதல் 10:9 வரை.

அ. ''விசுவாசத்தின் மூலம் வாக்குத்தத்தங்களில் கொடுக்கப்பட்டிருக்கும் ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்ளுகிறோம்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் எபிரேயருக்கு எழுதுகிறார் **(எபிரேயர் 6:12).**

1. ஆபிரகாமுக்கு தேவன் வாக்குத்தத்தம் பண்ணினார். **(வசனம் 13)**

2. ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குத் தத்தங்கள் சுதந்தரித்துக்கொள்கிறவர்களாகிய வாரிசுதாரருக்கு ஒரு ஆணையின் மூலம் நிச்சயப்படுத்தப்பட்டுள்ளது. **(வசனம் 17).**

3. இந்த வாக்குத்தத்தம் நிறைவேறும் படியாகவே நமக்கு முன்னோடியாராகிய இயேசு, மெல்கிசேதேக்கின் முறைமையின் படி நித்திய பிரதான ஆசாரியராகிய நமக்காக அவர் திரைக்குள் பிரவேசித்து

### சிறுவருக்கான கேள்விகள்

1. நோவா பேழையை எவ்வளவு ஆண்டுகள் பொறுமையுடன் கட்டினார்?

2. யோபு எல்லாம் இழந்தபோதும் எப்படி இருந்தார்?

3. பொறுமையினால் யோபு பெற்றுக்கொண்டது என்ன?

4. ஜெபம் செய்கின்ற காரியத்தில் நாம் எப்படி இருக்க வேண்டும்?

5. ஆபிரகாம் கீழ்படிதலில் பொறுமையாக இருந்ததினால் அவரது சந்ததியில் பிறந்தவர் யார்?

இருக்கிறார். (வசனம் 20).

4. மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவம் எபிரேயர் நிருபத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளது. (எபிரேயர் 7:1–10).

**ஆ. பூர்ணமடைதல், லேவி கோத்திரத்து ஆசாரியரால் அல்ல. (எபி. 7:11).**

1. லேவி கோத்திர ஆசாரிய முறைமையின் கீழ் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது.

2. இந்த லேவி கோத்திர ஆசாரிய முறை சம்பூர்ணமுள்ளதாய் இராதபடியினால் வேறொரு ஆசாரியத்துவம் தேவைப்படலாயிற்று. இதனால் ஆரோனின் முறைமையின்படி அமைக்கப்படாமல் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி அமைக்கப்பட வேண்டியதாயிற்று. (லேவி கோத்திர ஆசாரியத்துவத்தின் படியன்று).

**இ. ஆசாரியத்துவம் மாற்றப்பட வேண்டியதாயிற்று (எபி. 7:12).**

1. லேவி கோத்திர ஆசாரியர்களாலேயே, பழைய ஏற்பாட்டின் பிரமாணங்கள் அமலாக்கப்பட்டதே இதன் காரணம்.

2. இது மோசேயைக் கொண்டு கர்த்தர் நியமித்தது.

3. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோ யூதா கோத்திரத்திலிருந்து தோன்றினாரேயன்றி, லேவி கோத்திரத்திலிருந்து அல்ல. (எபிரேயர் 7:14).

4. யூதா கோத்திரத்தைக் குறித்து, மோசே ஆசாரியத்தைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லை.

5. தேவன் தாமே நமக்காக இயேசுவையே பிரதான ஆசாரிய ஸ்தானத்திற்கு நியமித்தபடியால், பத்து கற்பனைகளோடு கூடிய நியமப்பிரமாணம் தேவனால் மோசேக்கு கொடுத்ததின்படி இயேசு ஆசாரியராக பந்தப்படவில்லை. ஆசாரியத்துவத்துக்கு எப்படி மாறுதல் ஏற்பட்டதோ, அதேபோல நியாயப்பிரமாணமும் மாற வேண்டிய அவசியம் உண்டாயிற்று.

**ஈ. முந்தின கற்பனை, அதாவது நியாயப்பிரமாணம் மாற்றப்படலாயிற்று. (எபிரேயர் 7:18).**

1. மூன்று காரணங்களால் அப்படி நிகழ்ந்தது.

அ. நியாயப்பிரமாணம் பலவீனமுள்ளது

ஆ. யாயப்பிரமாணம் பயனற்றது

இ. நியாயப்பிரமாணம் ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை.

**உ. நியாயப்பிமாரணம் ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை. அதிக நன்மையான நம்பிக்கை வருவிப்பதோ, பூரணப்படுத்த வல்லதாய் இருக்கிறது என்பதை எபிரேயர் 7:19வது வசனத்தில் காண்க.**

**குறிப்பு:** அதிகமான நம்பிக்கை என்பது என்ன ? பத்து கற்பனைகளால் ஆன நியாயப்பிரமாணம் கொடுத்த நம்பிக்கைக்கு மேலானது என்று பொருள்படும்.

**ஊ. அந்த அதிகமான நம்பிக்கையின்படி தேவனிடத்தில் நெருங்கிச் சேருகிறோம்,**

தொடரும்...

| தமிழில் உள்ள வடமொழிச் சொற்கள் | தமிழ் சொற்கள் |
|---|---|
| 1. அசதி | அயர்வு |
| 2. பித்தம் | அழல்நோய் |
| 3. இலிங்கப்புற்று | ஆண்குறிப் புற்று |
| 4. காசம் | இருமல் |
| 5. சுரக்கட்டி (பீலீக விருத்தி) | இடப்பாட்டீரல் வீக்கம் |
| 6. சுவாசகாசம் | இரைப்பிருமல் |
| 7. சரீரம் | உடல் |
| 8. உடல் சில்லிடல் | உடல் குளிர்ச்சி |
| 9. மரணவாதை வலி | உயிர் போகக் கூடிய வலி |
| 10. அவயங்கள் | உறுப்புகள் |
| 11. அரோசகம் | ஊண் வெறுப்பு |
| 12. சோபை | ஊதல் நோய் |
| 13. சங்கிரக கிராணி | எரிச்சல் நிண கழிச்சல் |
| 14. மூலம் | எருவாய் முளை நோய் |
| 15. சூரியவர்த்தம் | எழு ஞாயிறு |
| 16. தனுர்வாதம் | ஏற்புநோய் |

| தமிழில் உள்ள வடமொழிச் சொற்கள் | தமிழ் சொற்கள் |
|---|---|
| 17. க்ஷயம் நோய் | என்புருக்கி (இளைப்பு |
| 18. அஸ்தி சுரம் | என்புச் சுரம் |
| 19. அஸ்தி வெட்டை | என்பு வெட்டை |
| 20. சப்த தாதுக்கள் | ஏழு தாதுக்கள் |
| 21. சேத்துமப் பிணி | அய்ய நோய் |
| 22. தாபிசுரம் | கடுங்காய்ச்சல் |
| 23. சீதபேதி | கடுப்புக்கழிச்சல் |
| 24. நேந்திர ரோகம் | கண்நோய் |
| 25. பேதி | கழிச்சல் |
| 26. உளைமாந்தை | குடல் இளைப்பு நோய் |
| 27. கிருமிகள் | குடற்பூச்சிகள் |
| 28. சுரக்கின ரோகம் | குரல் கம்மல் |
| 29. உதிரக்கெடுதி | குருதிக்கெடுதி |
| 30. பாலர் | குழந்தைகள் |
| 31. ஸ்நானம் | குளியல் |
| 32. துன்மாங்கிஷம் | கெட்டதசை |

தொடரும்...

# யோசுவா

அன்பான வாலிப சகோதர, சகோதரிகளே! உங்களை ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்.

இந்த முறை பொறுமையாயிருந்து தேவ வழிகாட்டுதலின்படி ஆசீர்வாதம் பெற்ற ஒரு நபரை பற்றி படிக்க ஆயத்தமாவோம்.

அவர் பெயர் 'யோசுவா'. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் தீர்க்கதரிசியான மோசேயினுடைய வேலைக்காரராக செயல்பட்டவர். இந்த யோசுவா மோசேயின் கீழாக அவர் சொல்வதையெல்லாம் மறுபேச்சு பேசாமல், அப்படியே பொறுமையாக அமைதியாக கேட்டு வேலை செய்து இருந்தவர். ஒரு வருடம் இரண்டு வருடம் அல்ல, கிட்டத்தட்ட 40 வருடம். பார்த்தீர்களா! எந்த அளவிலான பொறுமை அவருக்குள் இருந்திருக்கும். தன்னை விட பெரியவர் ஒருவர் சொல்கிறார் என்பதைத் தாண்டியும், மோசே ஒரு தேவனுடைய மனுஷன் என்பதையும் அவர் உணர்த்திருந்ததால் மாத்திரமே, அப்படி ஒரு பொறுமை அவருக்கு வந்திருக்கும் . **எபி 13:17** "உங்களை நடத்துகிறவர்கள்,உ ங்கள்ஆ த்துமெ ாக்களுக்காக உ த்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே."

ஆனால், இன்று யோசித்துப்பாருங்க! ஊழியக்காரரோ, அல்லது சபையின் மூப்பரோ உங்களைப் போன்ற வாலிபரை பார்த்து: 'ஏம்பா! இப்படி உன்னோட ஹேர் ஸ்டையிலை (Hair style) வச்சிருக்க?' அல்லது 'ஏன் டிரஸ் இவ்வளோ டைட்டா போட்டுருக்க?' 'செல்போன் அதிகம் யூஸ் பண்ணாத'; 'பைபிள் நிறைய படி, ஜெபம் பண்ணு,' 'சபைக்கு ஒழுங்கா வா', 'நோட்ஸ் எழுது', அப்படின்னு பொதுவான காரியத்தை சரிசெய்ய சொன்னாலே, நமக்கு எவ்வளோ கோபம் வருது; பொறுமையில்லாமல் போய்விடுகிறோம் இல்லையா?



வாலிப சகோதரர்களே! யோசுவாவைப் பாருங்கள்! அவர் கர்த்தருடைய தாசனாகிய மோசேக்கு கீழ்படிந்து நடந்து, தன்னுடைய சிறப்பான குணத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். இந்த பொறுமையினால் தான் யோசுவா, தன் ஜனங்களோடு, அந்த பாலும், தேனும் ஓடுகிற தேசமாகிய கானானுக்குள் பிரவேசிக்க தேவ அநுக்கிரகம் கிடைத்தது. **யோசுவா 1:5–7** "நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை; நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை. பலங்கொண்டு திடமனதாயிரு; இந்த ஜனத்தின் பிதாக்களுக்கு நான் கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசத்தை நீ இவர்களுக்குப் பங்கிடுவாய். என் தாசனாகிய மோசே உனக்குக் கற்பித்த நியாயப்பிரமாணத்தின்படியெல்லாம் செய்ய கவனமயிருக்க மாத்திரம் மிகவும் பலங்கொண்டு திடமனதாயிரு; நீ போகும் இடமெல்லாம் புத்திமானாய் நடந்துகொள்ளும்படிக்கு, அதை விட்டு வலது இடதுபுறம் விலகாதிருப்பாயாக."

பாருங்கள்! ஒரு சிறிய மாற்றம் எவ்வளவு பெரிய பலனை கொடுக்குது. எனவே, நாமும் சபையில, ஊழியக்காரங்க சொல்படியெல்லாம் பொறுமையோடு அப்படியே கேட்டு, அவர்களுக்கு சில காலம் அடங்கியிருக்க கற்றுக்கொள்வோம், அப்படியிருந்தால், தேவன் யோசுவாவை உயர்த்தின மாதிரி நம்மையும் கண்டிப்பாக உயர்த்துவார்.

– ஜோசப் பிரதீப்

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. M. ஜோனத்தான் – கரூர்
2. M. ராஜா – கரூர்
3. A. ஹனா ஜோதி – மதுரை
4. A. கார்பஸ் பிலேமோன் – மதுரை
5. A. கெனித் சாம் – மதுரை

## சென்ற மாதம் விடுபட்டவர்கள்

1. Mr. ஐசக் மில்லர் – வளர்நகர்
2. Mrs. பரிமலா ஐசக் – வளர்நகர்
3. Mrs. சகிலா – வளர்நகர்
4. Mrs. பங்கஜம் ஜேம்ஸ் – வளர்நகர்
5. குளோரி திலகவதி – சென்னை
6. ஜெ. ஜான்சி – ஆனைமலை

கடவுளுக்கு பிரியமான செல்லங்களே! உங்கள் யாவரையும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மூலம் வாழ்த்துகிறேன்.

எல்லாரும் சந்தோஷமாக இருக்கிறீர்களா? இந்த சந்தோஷத்தோடே, பொறுமையைக் குறித்து கற்றுக்கொள்ளலாமா?

நோவா என்ற ஒருவர் இருந்தாரு; அவர் ரொம்பவும் பொறுமையுடன் தேவனுக்கு கீழ்படிபவராய் இருந்தார் என்று, பைபிள் நோவாவை குறித்து சொல்கிறது. ஒரு முறை தேவன் நோவாவை அழைத்தார். உடனே நோவா, 'சொல்லுங்கள் நான் என்ன செய்யனும்' என்று கேட்டார். அதற்கு தேவன், 'நீ நான் சொன்னபடி ஒரு பெரிய பேழையை (கப்பலை) உண்டுபண்ணனும்' என்று தேவன் சொன்னார். தேவா தேவனிடம், அப்படியே செய்வதாக கூறினார். தேவன், பேழை 300 முழம் நீளமும், 50 முழம் அகலமும், 30 முழம் உயரமும் இருக்க வேண்டும்; மற்றும், அது 'கொப்பேர்' மரத்தால் செய்யனும் என்றார்.

மேலும் தேவன், அநேக கட்டளைகளை கொடுத்தார். நோவா அவைகளையும் செய்கிறேன் என்று சொல்லி செய்தார். அந்த கப்பலை செய்ய எவ்வளவு நாட்கள் ஆனது தெரியுமா? 100 ஆண்டுகள் ஆனது. அந்த 100 வருடங்களும், நோவா மிகுந்த பொறுமையுடன், அந்த வேலையை செய்வதில் இருந்த சிரமங்களை எல்லாம் பொருட்படுத்தாமல், 100 ஆண்டுகளும் மிகவும் பொறுமையுடன், சோர்வின்றி, ஓய்வின்றி, முறுமுறுப்பில்லாமல் செய்து முடித்தார்.

பேழையை செய்து முடித்த பிறகு, பேழைக்குள் நோவாவும் அவரின் குடும்பமும், தேவன் சொல்லியிருந்த மிருக ஜீவன்களும், பறவைகளும் உள்ளே சென்றார்கள். பிறகு தேவன் பேழையின் கதவை அடைத்தார். 40 நாள் தொடர் மழை பெய்து பெரு வெள்ளம் வந்தது. பேழைக்குள் ஒரு வருடம் தேவன் கதவை திறக்கும் வரைக்கும் நோவா பொறுமையோடு இருந்தார். மற்றும், அந்த ஒரு வருடமும் அனைத்து மிருகங்கள் மற்றும் பறவைகளையும் உணவளித்து காப்பாற்றினார். அதனால் தேவன் நோவாவை நினைவுகூர்ந்து, காற்றை வீசச்செய்து, தண்ணீரை வற்றசெய்து, பிறகு கதவை திறந்து விட்டார். ஒரு புதிய பூமி, புதிய ஆசீர்வாதம்!

பிள்ளைகளா, தேவன் நன்மை செய்யும் வரைக்கும் நோவா பொறுமையோடு கீழ்படிந்து காத்திருந்தார். உங்களால் பொறுமையாயிருக்க முடியுமா? நீங்கள் தனியே வசனம் படிக்கும்போது, சபையில் ஞாயிறு பள்ளியில் வசனம் கேட்கும்போது, ஒரு 5 நிமிடம் தாமதமானால் கூட எரிச்சல் வருகிறதா? கடவுள் உங்களை உயர்த்தும்வரைக்கும் காத்திருக்கனும், தேவன் சொன்னதை செய்யனும், அவருக்கு கீழ்படியனும். இப்படி பொறுமையாயிருந்ததினால், தேவன் நோவாவை உயர்த்தினார். நீங்களும் பொறுமையாய் இருந்து கீழபடிந்தால் தேவன் உங்களையும் உயர்த்துவார். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**மனன வசனம் : சங் 40:1**

"கர்த்தருக்காக பொறுமையுடன் காத்திருந்தேன்: அவர் என்னிடமாய்ச் சாய்ந்து, என் கூப்பிடுதலைக் கேட்டார்."

உங்கள் அன்பு அண்ணன்
– ஏசுதாஸ்

## துன்பத்தில் பொறுமை – யோபு

அன்புள்ள குட்டீஸ்! இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். இந்தமுறை துன்பத்தில்

பொறுமையாயிருந்த யோபுவை குறித்து படிப்போமா?

ஊத்ஸ் என்ற நாட்டில், இந்த யோபு என்ற மனிதர் வாழ்ந்து வந்தார். அவர் உத்தமனும், சன்மார்க்கனும், தேவனுக்கு பயந்து, பொல்லாப்பிற்கு விலகி வாழ்கிறவராய் இருந்தார். அவருக்கு 7 மகன்கள் மற்றும் 3 மகள்கள் இருந்தனர். மேலும் இவருக்கு 7000 ஆடுகள், 3000 ஒட்டகங்கள், 500 ஏர் மாடுகள், 500 கழுதைகள் மற்றும் நிறைய வேலைக்காரர்கள் இருந்தனர். அந்த நாட்டிலேயே யோபு மிகவும் பெரிய பணக்காரனாய் இருந்தார்.

ஒரு நாள் யோபுவின் வேலைக்காரன் ஓடிவந்து, 'ஐயா! வேலைக்காரர் அனைவரையும் கொன்று, நமது கழுதைகளை எல்லாம் சபேயர் கொண்டு போய்விட்டனர், நான் மாத்திரம் தப்பி இதை உங்களுக்கு அறிவிக்க வந்தேன்' என்றான். அவன் இப்படி சொல்லிக்கொண்டிருக்கும் போதே,

இன்னொரு வேலைக்காரன் ஓடிவந்து, 'ஐயா! வானத்திலிருந்து தேவனுடைய அக்கினி வந்து, ஆடுகளையும், வேலைக்காரர்களையும் அழித்துப்போட்டது' என அவன் சொல்லிக்கொண்டிருக்கும் போதே, வேறொரு வேலைக்காரன் ஓடிவந்து, 'ஐயா! கல்தேயர் வந்து நமது ஒட்டகங்களையெல்லாம் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். அதை தடுத்த வேலைக்காரர் அனைவரையும் கொன்றுவிட்டார்கள். நான் மாத்திரம் தப்பி இதை உங்களுக்கு சொல்ல வந்தேன்' என்றான்.

சொத்துக்கள் எல்லாம் ஒன்றுமில்லாமல் போய் விட்டது. பரவாயில்லை என யோபு நினைத்த வேளையில், ஒருவன் ஓடிவந்து, 'ஐயா! வீடு இடிந்து நீங்கள் பெற்ற பத்து பிள்ளைகளும் மொத்தமாக இறந்துவிட்டது' என பயங்கரமான துன்பத்தை யோபுவிற்கு அறிவித்தான். அத்தோடு முடியவில்லை யோபுவின் உச்சந்தலை முதல் பாதம் வரை கொடிய பருக்கள் வந்தது. அந்த வலியும் அதன் எரிச்சலும் தாங்காமல், மண்ஓட்டை எடுத்து சுரண்டிக்கொண்டிருந்தார். அதனைக் கண்ட அவர் மனைவி, 'தேவனை தூஷித்துவிட்டு, செத்துப்போ' என்று சொன்னாள். அவனுக்கு ஆறுதல் சொல்ல வந்த அவனது நெருங்கிய நண்பர்களும், 'இந்த கொடுமைக்கெல்லாம் காரணம், உன்னுடைய பாவம் தான்' என அவனை தூற்றினார்கள்.

ஆனால், இவை எல்லாவற்றிலும் யோபு தன் வாயினாலே பாவம் செய்யவில்லை. தேவனைப் பற்றி குறை சொல்லவுமில்லை. சொத்து போய், சொந்தம் போய், நண்பர்களும் தூரமாகி, சரீரத்திலும் நோய் வந்த போதும், யோபு அந்த துன்பங்களையும், நோய்களையும் தாங்கி, அதனை சகித்துக்கொண்டு, தேவனுக்கு பிரியமாய் சகிப்புத்தன்மையுடன், பொறுமையுடன் வாழ்ந்தார். அதனால் தேவன் அவரை இரண்டு மடங்காக ஆசீர்வதித்தார்.

குட்டீஸ், தேவனுடைய பிள்ளைகளாகிய நாமும், எத்தனை பிரச்சனை வந்தாலும் அதனை சகித்துக்கொண்டு, பொறுமையாக இருப்போம்! தேவன் நிச்சயம் நம்மை கைவிடமாட்டார்.

— குயினி பிரதீப்

## ஜெபத்தில் பொறுமை

அன்பான செல்லங்களே! நீங்க எப்படி இருக்கீங்க? நல்லா இருக்கீங்களா? நாங்க உங்களுக்காக ஜெபம் பண்றோம். நீங்களும் எங்களுக்காக ஜெபம் பண்ணுவீங்க தானே?

ஓகே செல்லங்களா, நாம இந்த மாதம், ஜெபம் செய்கின்ற காரியத்தில் நாம் எப்படி சகிப்புத்தன்மை அல்லது பொறுமை உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதை பற்றி தெரிஞ்சுக்கலாமா?

ஒரு ஊர்ல ஒரு நியாயாதிபதி இருந்தார். அவர் யாரையும் மதிக்கவும் மாட்டார். தேவனுக்கு பயப்படவும் மாட்டார். ரொம்ப மோசமானவராக இருந்தார்.

அதே ஊரில் ஒரு விதவை இருந்தாங்க; அவர்களுக்கும் அந்த விதவையின் எதிரிக்கும் இடையில் ஒரு பிரச்சனை இருந்தது. அதை அந்த விதவை அக்கா, அந்த நியாயதிபதியினிடத்தில்போய், 'ஐயா! எனக்கும் என் எதிராளிக்கும் இருக்கும் பிரச்சனையை நீங்கள் தான் சரிசெய்ய வேண்டும். தயவுகூர்ந்து உதவி செய்யுங்கள்' என விண்ணப்பம் செய்தாள்.

அந்த நியாயதிபதி அந்த விதவை அக்காவை, ஒரு பொருட்டாகக்கூட நினைக்கவில்லை. ஆனாலும் அந்த விதவை அக்கா விடாமல், தினமும் அவரிடம் வந்து, தன் பிரச்சனையை சொல்வதை நிறுத்தவில்லை. வெகுநாள் வரைக்கும் அந்த நியாயாதிபதி அந்த அக்காவிற்கு உதவி செய்யவில்லை. அவள் மேல் இரக்கம் கொள்ளவுமில்லை.

ஒருநாள் அந்த நியாயதிபதி, நான் தேவனுக்கு பயப்படாமலும், மனுஷரை மதியாமலும் இருந்தும் இந்த விதவை என்னை தொடர்ந்து தொந்தரவு செய்கிறபடியால், இனி இவள் நம்மை அலட்டாதபடி இவளுக்கு நியாயம் செய்ய வேண்டும் என தனக்குள்ளே சொல்லிக்கொண்டார். அந்த மோசமான நியாயதிபதியே தன்னிடம் தொடர்ந்து

விண்ணப்பம்பண்ணின அந்த விதவை மேல் இரக்கம் கொண்டாரே என்றால், இரக்கமும் உருக்கமும் அன்பும் நிறைந்த நமது பிதாவாகிய தேவன், அவரிடம் ஜெபிக்கிறவர்களுக்கு இரக்கம் செய்வது நிச்சயம் தான், என ஆண்டவர் இயேசு சொன்னார்.

செல்லங்களா, தேவனிடத்தில் நாம் ஜெபிக்கும் போது, சோர்ந்து போகாமல், சலிப்படையாமல், பொறுமையுடன் தொடர்ந்து ஜெபிக்கிறவர்களாக இருக்க வேண்டும். தேவன் தந்தால் வாங்கி அனுபவிக்கனும், இல்லையென்றால் அதனையும் ஏற்றுக்கொண்டு வாழ வேண்டும். அந்த சகிப்புத்தன்மை நமக்கு வேண்டும். செய்வீங்கதானே? கர்த்தர் அவரது இரக்கத்தின்படி உதவிசெய்வார்.

**மனனவசனம்: யூதா 20, -21**

"நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகாபரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு, பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணி, தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு, நித்திய ஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக் காத்திருங்கள்."

— பிரியா ஆண்டனி

# பொறுமைசாலியான ஆபிரகாம்

ஹலோ செல்லக் குட்டீஸ் ! உங்கள் எல்லோருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே என்னுடைய ஸ்தோத்திரங்களை சொல்லிக் கொள்கிறேன்.

செல்லங்களா, உங்களுக்கும் தேவ ஆசீர்வாதம் வேணும்தானே? சரி வாங்க, வேதகாமத்தில் ஆபிரகாம் தேவ ஆசீர்வாதத்தை பெற என்ன பண்ணினார் என்பதை பார்ப்போம்.

தேவன் ஆபிரகாமை அழைத்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப்போலவும் எண்ணவே முடியாத அளவுக்கு ஆசீர்வதிப்பேன் என்று சொன்னார். இந்த வார்த்தையை தேவன் சொல்லும்போது, ஆபிரகாமுக்கு 75 வயது; குழந்தையே இல்லை.

ஆபிரகாம் தேவன் சொன்னதை நம்பி, ஒரு வருஷம் இல்லை, இரண்டு வருஷம் இல்லை, 25 வருஷம் பொறுமையாயிருந்து, 100 வயதில் ஆசீர்வாத்தை பெற்றுக்கொண்டார். அந்த ஆசீர்வாதம் தான் ஈசாக்கு! ஒரு காரியத்திற்காக 25 வருடம் பொறுமையுடன் காத்திருப்பது என்பது அவ்வளவு சுலபமானதல்ல.

இப்படி பொறுமையாயிருந்து தனக்கு பிறந்த மகனாகிய ஈசாக்கினிடம் ஆபிரகாம் எவ்வளவு அன்பாய் இருந்திருப்பார். அப்படிப்பட்ட தன் அன்பு மகனை, தேவன், தனக்கென்று பலி கொடுக்க சொன்னதும் ஒன்றுமே எதிர்த்து பேசாமல், பொறுமையாய், பலி கொடுக்க மோரியா மலைக்கு கூட்டிச் சென்றார். பலி கொடுக்கும் போது, ஆபிரகாமை பார்த்து, 'ஈசாக்கை பலி கொடுக்க வேண்டாம்' என்று தேவன் சொல்லிவிட்டார்.

ஆபிரகாம் மிகவும் பொறுமையாயிருந்ததினால், ஈசாக்கை மட்டும் ஆசீர்வாதமாக பெறாமல், ஈசாக்கினுடைய சந்ததியில்தான் இயேசுகிறிஸ்து பிறந்தாரு. இது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம்! எல்லாவற்றிற்கும் காரணம் என்ன ? தேவனுக்காக காத்திருக்க ஆபிரகாம் காண்பித்த பொறுமை.

செல்லங்களா ! ஜெபம் பண்ணும்போது தேவனிடமோ, வீட்டிலே அம்மா அப்பாவிடமோ உங்களுக்க தேவையான ஒன்றை நீங்கள் கேட்டால், அதை கொடுக்கும் வரை பொறுமையாக இருங்கள். உங்களுக்கு அது நிச்சயம் தேவையானது என்றால், தேவன் உங்களுக்கு கொடுப்பார். சின்ன விஷயமானாலும், பெரிய காரியமானாலும் அடம்பிடிக்காமல், பொறுமையாய் இருந்தீங்கனா, உங்களுக்கும் தேவன் மிகப்பெரிய ஆசீர்வாதத்தை தருவதற்கு காத்துக்கொண்டிருக்கிறார். பொறுமையாய் இருப்பதற்கு நீங்க ரெடி தானே ?

**மனனவசனம்: எபி10:36** "நீங்கள் தேவனுடைய சித்தத்தின் படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்கு பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது."

— ஏஞ்சலின் கமலம்

# உங்கள் குடும்பத்தின் ஆவிக்குரிய வாழ்வை எப்படி மேம்படுத்துவது (Ken Tyler)

இந்த அவசர உலகில், நாம் நம்முடைய கவனத்தை மிக எளிதாக தவறவிட முடியும். எடுத்துக்காட்டாக, ஏராளமான பெற்றோர் தங்கள் பிள்ளைகளை, ஒன்றின்பின் ஒன்றாக ஏதாவது ஒரு விளையாட்டு செயல்பாடுகளில் ஈடுபடுத்துகின்றனர். மற்ற காரியங்களுக்கு குறைவாகவே நேரம் இருக்கிறது. நம்முடைய ஆவிக்குரிய தன்மையை மேம்படுத்த, தக்கவைக்க சிறப்பு முயற்சி அவசியம். உங்கள் குடும்பத்தின் ஆவிக்குரிய தன்மையை மேம்படுத்த, நான் சில எளிமையான வழிகளை இங்கே கூறுகிறேன்.

1. அது ஆசையில் ஆசைப்பட தொடங்குகிறது. நீங்கள் உங்கள் குடும்பத்தின் ஆவிக்குரிய வாழ்வின் தன்மையை மேம்படுத்த வேண்டும்.

2. சாப்பாடு வேளையில் சேர்ந்து ஜெபிக்கவும்: இதை செய்வதினால் ஒப்புக்கொள்வதை நீங்கள், உங்கள் ஆசீர்வாதங்களை தேவனிடத்திலிருந்து வந்தது என்றும் அதற்கு நீங்கள் நன்றியுள்ளவர்கள் என்றும், அடையாளம் காட்டுகிறது (யாக்:1:17) குறிப்பாக நல்ல உயர்தரமான உணவுகளை சாப்பிடும்போதும், உணவகங்களில் சாப்பிடும்போதும் ஜெபிக்க மறக்காதீர்கள்.

3. நீங்கள் படுக்கைக்கு போவதற்கு முன்பாக வேதம் வாசித்து, ஜெபிக்க உங்கள் குடும்பத்தாரை அழையுங்கள் (2 தீமோ:3:15). இது நாம் ஒருவருக்கொருவர் நெருக்கமாக இருப்பதற்கும், தேவனோடே நாம் நெருக்கமாக இருப்பதற்கும் உதவும். ஒருவேளை அந்த நாள் கடினமான நாளாக இருந்திருந்தால், உங்கள் குடும்பத்திற்கு தேவையான சமாதானத்தை இம்முயற்சி கொடுக்கும்.

4. நாம் குடும்பமாக சென்று தேவையுள்ள மக்களை சந்திக்கலாம் (கலா:6:10) யாருடைய சுமையையாவது நீங்கள் சுமக்கும் போது, உங்கள் குடும்பம் மற்றவர்களுக்கு சேவை செய்யும் ஆசீர்வாதத்தை அடையாளம் கண்டுகொள்ளும். நம் பிள்ளைகள் இப்பொழுது வளர்ந்துவிட்டார்கள். நாம் இப்படி செய்ய பழகியதால், இப்பொழுது அவர்கள் மற்றவர்களின் மீது உண்மையான அக்கறையுள்ள குணத்தோடே இருப்பதை பார்க்க முடிகிறது.

உங்கள் குடும்பம் ஆவிக்குரிய வாழ்வில் வளர்வதே, உங்கள் முக்கியத்துவமாயிருக்க வேண்டும். நம்முடைய குழந்தைகள் என்று வரும்போது, நம்முடைய நேரம் குறைவே. நான் உங்களை வலியுறுத்துவது என்னவென்றால், உங்களுடைய நோக்கம், ஆசை என்னவென்பதை நீங்கள் பரிசோதிக்கும்படி ஊக்கப்படுத்துகிறேன்.

– தமிழில் (பெவர்லி கிங்ஸ்லி)

## ஒரு நிமிட வேத ஆராய்ச்சி : கர்த்தருக்கு பயப்படுதல்

PAULA BATES

1. கர்த்தருக்கு பயந்து அவர் வழிகளில் .................... எவனோ, அவன் பாக்யவான். (சங்: 128:1)

2. அவருடைய .................... அவருக்கு பயந்திருக்கிறவர்களுக்குத் .................... , .................... (லூக்கா : 1 : 50)

3. அப்பொழுது பேசத்தொடங்கி .................... பட்சபாதமுள்ளவரல்ல என்றும், எந்த .................... அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ, அவனே அவருக்கு .................... என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன் (அப்: 10:34, 35)

4. ஆதலால், எனக்குப் பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே, நான் உங்களுக்குச் சமீபமாயிருக்கும் பொழுது மாத்திரமல்ல, நான் தூரமாயிக்கிற இப்பொழுதும், அதிக .................... , .................... உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரசாயப்படுங்கள்; ஏனெனில் தேவனே தம்முடைய .................... விருப்பத்தையும் செய்கையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார். (பிலி : 2:12, 13).

5. ஆதலால், .................... ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் .................... பக்தியோடும் தேவனுக்குப் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக் கொள்ளக்கடவோம். நம்முடைய தேவன் பட்சிகிற அக்கினியாயிருக்கிறாரே. (எபி:12:28, 29).

6. மேலும், நமது தேவனுடைய ஊழியக்காரரே, அவருக்குப் பயப்படுகிற.................... , .................... நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள் என்றும் ஒரு சத்தம் சிங்காசனத்திலிருந்து பிறந்தது (வெளி 19:5)

## ஜூலை மாதக் கேள்விகள்

1. உபத்திரவங்களாகிய மிகுந்த போராட்டத்தை சகித்தவர்கள் யார்?

2. அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு என்ன உண்டாயிற்று?

3. எந்த வழியில் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும் என பவுல் கூறுகிறார்?

4. அவமானத்தை எண்ணாமல் சிலுவையை சகித்தவர் யார்?

5. விசுவாசத்தின் பரிட்சையானது எதை உண்டாக்கும்?

6. ஆபத்து காலத்தில் என்னை நோக்கி கூப்பிடு என்றவர் யார்?

7. தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம் என்றவர் யார்?

8. கிறிஸ்துவினிமித்தம் தனக்கு வரும் எவைகளில் பிரியப்படுகிறேன் என்று பவுல் கூறுகிறார்?

9. அநியாயத்தையும், நஷ்டத்தையும் என்ன செய்யும்படி பவுல் சொல்லுகிறார்?

10. சோதனையை சகிக்கிற மனுஷன் எப்படிபட்டவன்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05-08-2018**

அனுப்ப வேண்டிய முவகரி : சகோதரி. **பேபி ராஜா**

45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல்: 92 4421 4421, 92 4431 4431

### சென்ற இதழ் பதில்கள்

| | |
|---|---|
| 1. II கொரி 13:5 | 6. தீத்து 1:17 |
| 2. கொலே 3:17 | 7. II தீமோ 1:5 |
| 3. யோவா 14:12 | 8. ஏசா 28:16 |
| 4. மாற் 16 : 16 | 9. எபி 11:6 |
| 5. அப் 23:1 | 10. I தீமோ 1:18 |

### சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. B. ஜாய்ஸ் ஜோசுவா - வெள்ளறம்
2. G. ஏஞ்சலம்மாள் - மதுரை
3. P. ஐசக் மில்லர் - மதுரை
4. A.C.J. சகிலா - மதுரை
5. A.C.J. பரிமளா - மதுரை
6. Mrs. பங்கஜம் ஜேம்ஸ் - மதுரை
7. லில்லி ஆல்பர்ட் - திருநெல்வேலி
8. Mrs. தெல்மா ஸ்டான்லி - மதுரை
9. J. விஜய் - மதுரை
10. M.S. ஜேம்ஸ் - திண்டுக்கல்
11. Mrs. பிலோமினா பிரபாகரன் - காரைக்கால்
12. M. ஈஸ்வரி - கரூர்
13. S. சூசை மரியன் - சென்னை
14. A.C. குமார் - மதுரை
15. ஜெபசீலி ஜெயக்கொடி - திருச்சி
16. ஹெலன் திலக் - மதுரை
17. A.G. சாமுவேல் - தூத்துக்குடி
18. ரூபி ஜெபராஜ் - மதுரை
19. டெய்ஸி தர்மராஜ் - புதுக்கோட்டை
20. லில்லி புஷ்பம்- தூத்துக்குடி
21. சாந்தி வில்லியம் - புதுக்கோட்டை
22. ரேச்சல் தமிழரசி- மதுரை
23. மேரி ராஜ் - மதுரை
24. அனிதா நெகேமியா - ரெட்டியார்பட்டி
25. ஹெப்சிபா தாம்ஸ் - மதுரை
26. அன்னதாய் ஆல்பர்ட் - தூத்துக்குடி
27. ஞானசிரோமணி- மதுரை
28. J. ஜெயபிரகாஷ் - கர்நாடகா
29. S. பாக்கிய ராஜம் - மதுரை
30. C. ஆறுமுகம் - கன்னியகுமாரி
31. அன்பு சுதந்திரம் - திருநெல்வேலி
32. கிறிஸ்டி ஜோசப் - சேலம்
33. தெபோராள் ஸ்டீபன் - சேலம்
34. ஹெப்சி ராஜன் - சென்னை
35. Dr. D.S. ஜெபநேசன் - திண்டுக்கல்
36. ராஜா சிங் தேவி - திருப்பூர்
37. ராணி சாந்தகுமாரி - மதுரை
38. சாந்தி ஜோயல் - திருச்சி
39. ஷீலா ரிச்சர்ட் தாஸ் - சென்னை
40. சுகந்தி ஜோன்ஸ் - திருச்சி
41. ஜெயமணி ஜெயபாண்டியன் - கடலூர்
42. பிரேமலதா சுந்தர் பாபு - செங்கல்பட்டு
43. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் - சேலம்
44. S. கேத்ரின் அருள் நேசம் - மதுரை
45. S. அசோக் குமார் பிரின்ஸ் - தூத்துக்குடி
46. டி. ஹில்டா - சென்னை

## பார்வையற்றோருக்கான வேதாகம முகாம் - தஞ்சாவூர்

(பார்வையற்றோருக்கு சுவிஷேசம் அறிவிக்கப்பட்டு, சிறப்பு பரிசும், ஆடியோ பைபிளும், ப்ரைல் வேத பாடங்களும், Walking Stick & சேர் பின்னும் வயரும் கொடுக்கப்பட்டது)









## பார்வையற்றோருக்கான வேதாகம முகாம் - பெங்களூர்

(பார்வையற்றோருக்கு சுவிசேம் அறிவிக்கப்பட்டு, சிறப்பு பரிசும், ஆடியோ பைபிளும், ப்ரைல் வேத பாடங்களும், அரிசியும் கொடுக்கப்பட்டது)












மதுரையில்
ஜூலை மாதம்
தேவ கிருபையால்,
உங்கள் உதவியினால்
பார்வையற்ற
சகோதர சகோதரிகளுக்கு
அரிசி வழங்கப்பட்டது


Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2018 - 2020
Date of Publication : 8th July 2018
Posted at Arasaradi HPO on 10th, 11th July 2018

## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்











அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்








அடிப்படை (Basic) மற்றும் முதுநிலை (Advanced)
பைபிள் பாடங்களை தபால் வழியில் படித்து,
அழகிய சான்றிதழும் (Certificate)
முழு பைபிளையும் பரிசாக பெறுங்கள்!



வீட்டில் இருந்தபடியே
வேதபாடங்களை படித்து
பைபிள் பரிசையும்
தேவ ஆசீர்வாதமும்
பெற்றுகொள்ளுங்கள்

## கைபிரதிகள்


உங்கள் சுவிஷேச ஊழியத்திற்கு
கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில்
பாதி விலையில் கிடைக்கும்.
விபரங்களுக்கு
**92 4421 4421, 92 4431 4431**

If undelivered please return to :

**EDITOR
KIRUBAIYULLA VAARTHAI**

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers